கன்னியரிருவர்கள் களிப்புறுஞ்நேயனை
தனகமால்வளரமகள் கலசப்பாலுண்வாயனை
பன்னுங்கலசமுனி பாவிப்புகழ்தூயனை
பகருமதி வுபாயனை — வரு

என்னுருயிர்த்துணையா யிருக்குமயிர்தவல்லி
பிக்ஷணம்பால்மாரும லெழிற்குன்றைக்குடிபுல்லி
என்னசொன்னாளென்றவ ரேதேனுமுனைக்கெல்லி
யிழுத்தாலும்பேச்சையவற்கிதவுவார்த்தைகள்சொல்லி .வ

பதம் இ-ம் சாரங்கம் அடதாளம்.

பல்லவி.

கையிற்பணமில்லாமற் கலவிசெய்யவந்தீரோ
கடனாளெழுந்திருஞ் சாமி

அநுபல்லவி

ஐயரேதென்பழனி யருமைக்குமரேசரே
அம்மான்மகளானாலும் சும்மாவரப்போவாளோ - கை

சரணங்கள்

ஆசையிருந்தாலென்ன காசைவிடவும்போமோ
வழகுமாப்பிள்ளையானால் வளவுக்குச்சிலவாமோ
வேசைக்குக்காசல்லாமல் வேறேபிரியமுண்டோ
விணாய்வந்தாலநீரங்கள் வீட்டுக்கிழவியாள் கை

தெந்தினம்பாட்டுப்பாடி திருநாமமிடவந்தீர்
சிரித்துச்சிரித்தசையிற் றிருக்கைபோடவுகந்தீர்
அந்தக்காரணத்தாலென் மனதைமயக்குகிறீர்
ஆரியக்கூத்தாடினாலுங் காரியத்தைவிடலாமோ கை

பதம் இ-ம் அடாணா தாளம் ரூபகம்,

பல்லவி:

அதிவேனறிவேணடாசுவாமி உந்த
னாசைப்புமிருகைவிசைப்பும்பசப்பும்

அநுபல்லவி,

அறிஞர்களேத்தும் வேளூர்தனில்மேய
வையனேமெய்யனே பன்னிருகையனே- அறி

சரணங்கள்

வேண்டியபொருளைக் கொடுத்துக்கொடுத்து
வெகுவாயுலமனஞ் சலித்துச்சலித்து
வெறுத்தவர்பேரில் பிருவுகளசெய்கிறாய்
வேண்டிவேண்டியென் றேசுரீர்பேசார்
எதுக்கோவென்னுடன் வாதுகள்செய்கிறீர்
யெதுக்குமஞ்சவா ளென்றெண்ணிபாராதி
ரிருக்குமும்மிட கருத்தைமெத்தவும் - அறி

கடைக்கண்ணாலென்னை மிரட்டிமிரட்டிக்
கருணையுள்ளோர்போலப் படித்துப்படித்து
கதையெடுத்தோதுமுன் றெழில்வகை யெல்லாந்தெரியும்
விடையுயர்த்தவன் றந்தமுத்தையனே
விணுக்குழைப்பாளென் றெண்ணிமயக்காதே
விந்தைநடம்புரி சுந்தரமயிலின்மேல்
வேடிக்கையாய்வரும் வாடிக்கைகள்மெத்த- அறி

வேசைக்குங்காசுக்குந் தொந்தமதல்லவோ
மேதகுநாதனுக்குச் சொந்தமல்லவோ
வீணைசைகொண்டின்றுளென்ன பலன்கண்டேன்சாமி
பாசமதாய்சுப்ப ராமன்செந்தமிழைப்
பாடுமென்னுடனே கூடும்முறையை
ஆசைவார்த்தைக்கேட்டு மோசம்போனேன்மிக
வன்னுட்சொன்னமொழி வின்னூள்வாக்காணேன்- அறி

பதம் இம். கேதாரகௌளம்-சாப்பு தாளம்,

பல்லவி

அஞ்சுகமேயென்னைசக்கண்ணாளனை
டழைத்துவாடிமானேகண்ணாளனை

அநுபல்லவி

கஞ்சமலர்த்தடஞ்சூழ கச்சிநகரில்வாழுங்
கருணாகடாக்ஷிங்கள் கரிகிரிவாசனை

சரணங்கள்

மாங்குயில்கூவுது மருகத்தாவுது
பாங்கியேமன்மதப் பயல்கணைமீறுது
திங்கள்கடுகையாலென் னங்கமெல்லாநோகுது
தேமறபடர்ந்தகொங்கை விம்மிமையல்மீறுது. அஞ்
சிந்தையிற்றுயர்மிக மிகுந்துவருகுது
சித்தசன் கணையாற்காம லாகிரிபெருகுது
எந்தவிதத்திலேனுமிங் கழைத்துவருவது
யேந்திழையேயுன்கட னிசையாவிடிற்ருளாது—அஞ்
அச்சுதனுமெங்கள் கச்சிகேகர்வாசகனை
யன்பாடிக்கமலத் துரையுமதிநேசனை
இச்சையுள்ளோர்கள்பேர விருக்குஞ்சகதீசனை
இக்குவரச்சேய்தானைக் கிகத்திற்செய்வேன்பூசனை. அஞ்

பதம். இ௩ம் தோடி —அட-தாளம்.

பல்லவி

தெளிந்தநிலவுபகல்போலவெரிக்குதே என்னுசைகட்டியைப்
பா ரமல்எந்தன்மனம் பதைபதைக்குதே

அநுபல்லவி

அளிநேர்விழிசிற்றிடைச்சி துரைச்சிட
அருமைதெரிந்துமோசஞ் செய்த யந்தன்
வளருதேராப்பொழுதேயுக ளே பாவி
வரவரவுமேமோக மீ மாகுதே
 ற்றிழிதழுறுதே . தெ

சரணங்கள்

சித்திணிபிவளென்று மெத்
மெத்தைமீதினிறசென்று வும்பிரமைகொண்டு
மஸ்தகமார்பினின் முத்தமிட்டுக்கொண்டு
மன்மதகேளிக்குப் வளஞ்சேர்சந்தனம்பூ
தங்தைமொழியினுளைக் பந்தயங்கள்பேசி
வித்தையைமறந்தாளோ கைத்தலத்தாலணைக்க
குளிர்ந்தவேளையில்வந்தே மீண்டேபொருந்தாளோ . தெ
கும்பல்தனங்குழையக் குலவிமாரபோடணைத்து
கட்டிமனமகிழ்ந்து

வனமாயேந்தனுக்குச்செவ் கனிவாயிதழைத்தந்து
மையல்மிகவும்பூட்டி யல்குற்படத்தைக்காட்டி
துன்பமணியுங்கிருஷ்ண லீலைப்போற்பாராட்டி
சுகந்தாவருவாரோ சீமாட்டியென்கண்ணுட்டி . தெ
சற்றேசெய்துமோடி சுத்தமதாகதந்தாடி
வித்தையதாகப் பாடி நித்தமுநான்கூடி
நித்திரையினிற்கண்ட கனவாச்சேயதை
நினைக்கநினைக்கபெரு மூச்சாச்சே
பத்தன்சுப்பாரமன் பக்கினிலிருந்தேன்றும்
முத்துமுத்தாய்குலாவு மொழியாளைக்காணுமல் . தெ

பதம்-இ-ம் சாவேரி-தாளம்-ரூபகம்

பல்லவி

எங்கேயிருந்தாலுந்துரை சாமிக்கென்மேற்பக்ஷம்
யிருக்குமடியன்னமே

அநுபல்லவி

செங்கழுனீரோடைசூழுந் திருவாரூர்தனில்வாழும்,
தேவாதிதேவன்வசந்த தியாகேசனவனுக்கு

சரணங்கள்

நானவனுக்குச்செய்த நன்றியிவ்வுலகுள்ள
நாளளவு மறக்கான் ஒரு
நாளாகிலுமென்னை விட்டிதுவரையில்
நாழியும்பிரிந் திருக்கான்
ஏனோவென்மேல்மோடி தானேசெய்தக்கொண்டு
மானேயிருக்கின்று னெனைசெய்குவேன்
எவர்களுடன்கூடி யிருந்தபோதிலும்
யென்போலவனுக்கு கிடைக்குமோபோடி . எங்
ஆசைநாளையிற்றலை தொட்டெனக்குச்சொன்ன
வாணையனக்கிரண்டு செய்யான் அவனுக்
காராகிலுமென்மீது தூறுசொன்னபோதிலும்
அனைமனத்தினிலென்றும் வையான்
சூதுக்காரக்கள்ளி சக்களத்தியென்மேற்
தொடுத்தவெல்லாமோதி அனைசாமியைமயக்கக்
சொக்குபொடியுந்தூவி தலையாமோகந்தந்தானே
சுகமாகத்தானேயுவன் வாழட்டுமென்னகள்ளன் : எங்

சத்தேசகாலமுமச் சித்தினியுடனேகூடி
யிருந்தபோதிலுமென்னைத் தப்பானவனை
இணைந்தறபத்துகான்கு காரணஞ்செய்யும்போது
மென்னைநினைந்துருகிச் சுகிப்பான்-என்
கோதப்பூங்குழலாளே கோதாயேன்மலைக்குராய்
கொள்ளையாகுமிச்சள்ளை வெள்ளையாய்சாளைத்தெரியும்
உற்றநிலவேங்காளு மொளிக்குன்றுதிருக்குமோ
வோதுஞ்சுப்பராமன்றமிழ்க்குகந்தரூர் தியாகேசன்-என்

பதம் இ.ம் கியாஸ் தாளம் ஆதி

பல்லவி

வருவாரென்றெண்ணிகானே
வகைமோசம்போனேனே

அநுபல்லவி

திருவர் தணிகாசலதுரை
சிவசுப்பிரமண்ணிய னெனுநினைய, வரு

சரணங்கள்

பாலகொண்டுபுல்லி வாய்மைகள்சொல்லி
ஜாலக்காரனவன்செய்த சமர்த்தறியாமலிங்கே, வரு
காலுனையென்றும் கழுவவிடேனென்று
தேனொழுகப்பேசியென்னை தெருகடக்கவிட்டவனிங்கே, வரு
அற்புதபாத னாருமுகநாதன்
சற்கனைகஞ்சிவார்த்துதழுவித்தலைதொட்டவடிவேலனிங்கே வரு.

பதம்-இ.ம்.அடதாளம்

பல்லவி

ஆசைமிஞ்சுதேபெண்ணரசே என்னை
யணைக்தொருமுத்தம்தாடி

அநுபல்லவி

வேசையர்க்குள்ளேயுல் லாசைக்காரிநீநல்ல
மேடையின்மேல்வினை யாடுவோமிருவரும் ஆசை

சரணங்கள்

பத்தரைமாற்றுள்ள தங்கசரீரத்தைப்
பார்த்துப்பார்த்தென்மன முருகுதே
குத்துக்குஜமிரண்டுங் கண்டவுடனெனக்கு
கூடவேணுமென்றுமற் பெருகுதே
இத்தனைமோடியாமோ ஏய்க்குருய்சும்மாபோமோ
பத்துபொன்நூறுபொன் றருவனடியென்னைப்
பாரடிமையல் தீரடியன்னமே—ஆசை
சிதக்குளக்கரையிற் றண்ணீரிலுனைக்கண்டு
சிந்தைமிக மயக்கினேனடி
மாதரசேயுன்னைப் போலபெண்களிந்த
மண்டலத்திலெங்குங் காணேனடி
கரதலூடனுனது காலோடுகால்பிணைத்துக்
காசிலுள்ளம்துணி நாவதானிவிக்
கலந்துமன்மதலீலை செய்யவும். ஆசை
இடையிலுடுத்ததுகிற் காற்றிலொதுங்கும்போதுன்
னிருதுடைபசும்பொன்போற் காணுதே
வடிவுறமஞ்சள்பூசும் வாடையதனைக்கண்டேன்
மதிமயங்கியேப்ரமை பூணுதே
அடைவுடனென்னைக்கூடி யதாரசத்தைத்தாடி
குடமதுதனிலென் னுகிர்வநோட்டவும்
கொக்கோகவிதியின்படி புட்குரல்காட்டவும்ஆசை

பதம். இ: ம.கல்யாணி-அடதாளம்

பல்லவி

என்னகாரியங்கண்டு இந்தகுமாரன்பேரில்
இச்சைவைத்தாய்மகளே

அநுபல்லவி

சின்னஞ்சிறியன்மேலு மின்னங்குழந்தைவேலன்
செடியுங்காமனையுங் குடிவாட்கையுநிலையும்- என்

சரணங்கள்

தேடிக்காணவேன்று லோடிமலைமலையாய்ச்
சென்றுநினைக்க வேண்டும்-அவ

சேர்வையோவெளிதல்ல செய்யுமடமாங்கள்
செப்பவேவரா லாகும்
நாடித்திரிந்தார்குன்றை கோடிகோடியாகவே
நாளைக்கும்விளையாட்டாய்த் தாளாலெற்றிபெறிவான்
பாடவோரொருகவிப் பாடினாலுங்கேளான்
பதினாராயிரம்புக ழாறுப்படையைக்கேட்பான். என்

சோகமென்னடிமாதே யோகபுருஷனைத்
தாப்திளைப்புனைஞ் சென்றுஅங்கு
சொல்லுமாயாலோட்ட நிறைவறியாய்பெண்ணையமாத்தி
தூக்கிக்கொண்டானே யன்று
ஆகையாற்கேளடியே யவன்தந்தையோகபாலி
யதினும்பிட்சாண்டிபெற்ற வன்லேயேமுழுநீலி
வாகைசேர்பத்திரகாளி வாய்த்தமாயன்கோலி
வையாசூத்திரதார ரையோபண்ணுவாரேகேலி. என்

பதம்—இ—பியாக்கடை. தாளம்=ரூபகம்
பல்லவி

கண்மணியேயென்சாமியை யின்னம்வரக்காணேனடி
கனவிலுமறவேனடிமானே

அநுபல்லவி

முன்னெங்களுமைபாலன் மாதவர்கட்கனுகூலன்
மைந்தன்சபாபதிமால்தரு சந்திரனையமைதனுவாபோடி-கண்

சரணங்கள்

எத்தனைமோடியென்சாமிசெய்யும்விந்தைகளேதென்றுசொல்
வேன்
சித்தசன்வந்துயெத்தவுமென்னை யெத்தானடி
மெத்தையிற்படுத்தாலுமென்கண் ணித்திரையோவருவதில்லை
குத்துக்குஜங்கள்விம்மினதுகுழையுதே யிதற்கென்னசெய்
வேன்-க
பண்டேபழகியிருந்தசாமியென்றைக்கவ ரென்னண்டையில்வரு
வார்
கண்டுகொண்டாற்கலக்கந்தீரும் காமிநானடி
தென்றற்காற்றும்விசதடி திகழ்துடைரெண்டுந்துடிக்குதடி
இந்தவேளையிலெந்தன்சாமியை எவ்வகையேனுமழைத்து
வாபோடி
இந்தவிரகவேதனைமானேநா னெந்தவிதத்திற்சகிப்பேன்
அந்தரங்கமியாவுமறிந்தபுருஷ னழகுதுரையடி

பதம்.-இ,ம்—பியாகடை-ரூபகதாளம்

பல்லவி.

எங்கேயாகிலுமவன் சுகித்தாலதுபோதும்
ஏண்டிநீதூற்றுகிறாய்

அநுபல்லவி

கங்கையைத்திங்களைக் கதிர்சடையணியீசன்
காலைத்தூக்கிநின்றே யாடும்சிதம்பரேசன் எங்

சரணங்கள்

பெண்ணென்றுயான்பிறந்த பிழைபிற்றிருப்பதாலே
பேச்சாலாவதென்னடியினி மேலே
என்னென்றவார்சோலினவ் விசைவார்த்தைபுவிமேலே
யெல்லாஞ்சரியென்றவ ரெண்ணங்கொண்டதினாலே—எங்

வருத்தப்படுவதினால் வருவதென்னமுன்னம
அவர்நத்தியதெல்லாம்போம் நாளுத்தினாலோசின்னம
இரவும்பகலும்வன்னைப் பிரியாமலேகூடி
யிருந்தபுண்ணியன்றன்னை யென்சொல்லுவேன்போடி-எங்

அதிதினமும்வரை யணைவதற்குநானே
யாசையுற்றேவெகு நேசமதாகினேனே
மனதிற்றயவிருந்தால் வருவாரடிமானே
மானமில்லாதவன்மேல் மையல்கொண்டவர்தானே—எங்

பதம் இம்-தோடி—தாளம் ஆதி

பல்லவி

மானேமயிலேகுயிலேகண்மணியே என்மன்னனைக்காணேயே
மானேமயிலேகுயிலே கண்மணியே

அநுபல்லவி

தேனேவெங்கடன்பதி ஸ்ரீபதி
திகழுஞ்சபாபதிசந்நிதானைத் தேடிவாடி மானே

சரணங்கள்

கன்னிவயதிலென்னைக் கைபிடித்தாரடிமானே அடியேதேனே
கலந்துசுககலவி செய்தாரடிசோடி
மன்னனுக்கேவளோ மோசஞ்செய்து
மருந்திட்டவகையை ஞானதிவேனடி
மனதுசலங்கிதுரை மலன்மலர்ப்பகழியால்
மயங்கித்திரிகிருரோ வெறியெனடி-மானே

மதியுமுதித்ததிப்போமனது கலங்கித்துரைமானே அடியே தேனே
மதன்கணையோசர மாரிதொடுக்கிருனே
மன்னனில்லாதயில் வேளையிலேநான்
மனமகிழ்ந்திருப்பது மழுசோடி
மதியனல்தாவுது விதிவசமோபெண்ணே
வஞ்சியான்முன்செய்த பூசாபலன்ருனே-மானே

பதம் இம் பியாகடை அடதாளம்

பல்லவி

ஆருக்காகிலும்பயமா சும்மாய்ச்சொல்லட்டு
மதிலென்னரகசியமா

அநுபல்லவி

போருக்குவிசையனென் மோடிவிக்கதுரை
போகங்கிடைத்ததேக்தன் யோகமல்லவோபெண்ணே ஆரு

சரணங்கள்

நானேசம்மதித்தால் மற்றவர்க்கென்னகஷ்டி
ரசாங்கமறிந்தவற் கார்சொல்லுவாரட்டி
மானேமதயானைமே லேறியுந்திட்டி
வாசலுமைழுய வேணுமோபனாகொட்டி ஆரு
மனதுக்கிசைந்த மணவாளனைச்சேர்ந்தாலென்
வாய்மதம்கொண்டுபேசும் வம்பாகளுரைக்குஞ்சொல்
தனதாயெடுத்துக்கொள்வோர் சாவசண்டாளபாம்புள்
சார்புடையோரேனக்கென் சாமிவந்தார்கோடிபொன் ஆரு

நான்பிடித்ததுவென்ன முருங்கையின்கொம்புபிடியா
நடத்தைதெரிந்தவருக் கொருவர்சொன்னபடியா
மான்போல்விழியாற்கெல்லா மஞ்சினகுடியா
வஞ்சியாணிதற்கெல்லா மஞ்சினகுடியா—ஆரு

பதம் இம் கியாகல் தாளம் ஆதி

பல்லவி

என்னிடங்கடத்தைக்குத் தேவரீர்மோடிக்கு
மெங்கவிதஞ்சேருஞ்சாமி

அநுபல்லவி

கன்னற்செவிக்கும்வேளூர் முத்தக்குமாரசாமி
இன்னமென்னபேசுவன் னெண்ணம்வேறதர்ச்சு என்

சரணங்கள்

ஆதியிற்சொன்னதெல்லாம் வெட்டவெளிச்சமாச்சு
வடியாட்செய்தவாற்றிற் கரைத்தபுளிபோற்போச்சு
சூதுக்காரியவன்றற் போதனைமிகவாச்சு
மோசந்தமேனநம்புமென் னதிஷ்டமிப்படியாச்சு என்

தேடியழைத்தாப்போலே யும்மிட்மிகுநேசம்
தெரிந்துநீர்செய்த தெல்லாமுழுமோசம்
வேடிக்கைசொற்களோ விநயமாக்குரீர்நாசம்
வேறேயானதினாலே வருகுதேமிகுரோஷம் என்

மலராக்கசக்கிமுகர்ந் ததினாலுணவோபாவம்
மனமுமனமுமொத்து மருவினாலுண்டோகோபம்
குலதெய்வமாய்ச்சுப்ப ராமனதுநினமும்
கொண்டாடுஞ்சேவலம் கொடிக்குமராசிறியாள் என்

பதம் இம் சாவேரி தாளம் மிஸ்ரம்

பல்லவி.

கணவன் வந்தழைக்கிறன் போய்வருகிறேன்பக்ஷம்
கருத்திலிருக்கவேணும்

அநுபல்லவி

மணிமேருமவனை மதினை புயனே சன்முகவேலா
வாலிபந்தனிலென்னைத் தாலிகட்டின சொந்தக். கண

சரணங்கள்

அடிக்கடிபுகழ் சொல்லியனுப்பின
லனுமானைத்துக்கிடந் தோணுமே
எப்படிக்குறா மிருந்தாலுமூவருக்குப்
பால்குடித்திட வேணுமே
கடத்திறுமவன் விட்டுப்போவதில்லை
சுசக்கிமோர்வதினல் ரசச்யமோன்றுமில்லை
அறிந்தவிட்டுக்காரி யறிந்தாலுமிருதொல்லை
ஐயனே யென்மன தாரவஞ்சினையில்லை கண

கொண்டவன் தூற்றினுற் கூறையுந்தூற்றுமென்று
கூழம்பழமொழியென்ன பொய்யோ
தண்டரீகனிச்செய்தி யறிந்தாலெளிதில்விட்டான்
சாமிசித்தமென் பாக்கியமையா
குண்டுணியானவதற்கு கொள்ளிவாயிருக்காது
குலத்துக்கிழுக்காஞ்சொற்கள் கூர்வதுகூடாது
பெண்களெல்லணவன்சொற் பேசுமிறப்படாது
பிடித்ததேபிடிவாதமா யோதுவது தகாது. கண

பங்கயமலர்போல் வெங்கிருந்தாலுமுன்
பதத்திலெனதுசிந்தை யிருக்கும்
துங்கமுறுங்கடப்ப மலர்மார்பாபரவுபசாரச்
சொல்லல்லிது தெரிந் திருக்கும்
சங்கையிருந்தாலேநேரே வெளியாக்கிப்போறுத்துக்கும்
சுவாமியெந்தனத்தை தெரியுமுன்கருத்துக்கும்
பங்குனிதிருநாட்கு வருகிறேன்பொறுத்துக்கும்
பத்தன்சுப்பராமன் பாட்டுக்கருள்வேர்ய்பசித்திருக்கும். கண

பதம் இ-ம் புன்னாகவராளி தாளம் மிஸ்ரம்

பல்லவி

வந்தகாரியமேதையா தேவரீரிங்கே
வந்தகாரியமேதையா

அநுபல்லவி

வந்தகாரியமேது வகையோசமாயிருபோது
கொந்தளமணிமார்பா குருவேகோபாலரிங்கே

சரணங்கள்

பரவசமுமக்கங்கே பட்சமில்லாதிங்கே
வரவாமோகமங்கே மாயங்காட்டுரீரிங்கே
ஸ்திரமானதுமெங்கே தெண்டிக்கதேவரிங்கே
குருபூசையுமக்கங்கே குருவேகோபாலரிங்கே வந்த

பூசங்களபமெங்கே பொய்வார்த்தைசொல்வதிங்கே
காசும்பணமுமங்கே கபடங்காட்டுகிறீரிங்கே
கூசாமற்போவதங்கே கோணிக்கொள்வதிங்கே
வாசமுமக்கங்கே மருவுங்கோபாலரிங்கே வந்த

எங்கோசமுமக்கங்கே யிந்திரஜாலமுமிங்கே
மூர்த்திகேகமுமக்கங்கே சலிப்புடனுசையிங்கே
சந்தோசமுமக்கங்கே சலிப்புடனுசையிங்கே
விந்தைகல்வியங்கே வினசகோபாலரிங்கே வந்த

பதம் இ௰ அடாணா தாளம் ஆதி

பல்லவி

செருக்கும்யக்கந்தலைக்கேறியேயிங்குவந்து
நில்லும்நில்லும்பேசுருமென்னடி

அநுபல்லவி

விருப்பவன்மீதினிலே ரொம்பவிருக்குது
வெறிகொண்டவன்போலவே மனதுசஞ்சலிக்குது
வெறுப்புமேலாசைகொண்டு பசப்புறுனிங்கேவந்து
வெற்றிவேலணியுஞ்சீலன் முத்துக்குமரேசலோலன் செரு

சரணங்கள்

குத்துவிளக்கைக்குட் புடத்திருப்பதுபோல
வைத்திருக்குஞ்சூதகளை வித்தகையென்றறியாமல்
உற்றவுற்றேயவனைப் பார்த்திருனைதக்கேட்டால்

வித்தையேதோபடிக்கிரு ளுத்தமபுனிதனொந்தன்
முத்தத்தைக்கொடுக்கச்சக் களத்தியானதாலெனக்கு
முற்றுமேதகோபமாருமலுற்றசிவனுஞ் சொல்லாமல்—சிறு
சேலைபட்டுக்காரி வாலைப்பருவம்போலே
கோலஞ்செய்துக்கொண்டல்ல மாலைப்போதிலேமயக்கு
சாலைவாயலிமேலநின் நிலவுவனைதாசிவன்கண்டு
ஜாலஞ்செய்கிறுனேமெத்த லீலைதெரிந்தவளன்றே
நாளைத்தெரியும்தேல்லாம் நாலுபேர்நகைக்கவேதான்
கேலிக்கிடமானேனடி மேலக்குழலியேபந்த—சிறு
கொக்கோகம்பாரத்தவன்போலச்சொக்குறுனவளைக்கிண்
சக்களத்தியவட்கல்கு சொக்குப்பொடியிருக்குதா
பக்குவகாலத்திலேந்தன் அக்கத்தைகட்டிக்கொண்டாளே
அக்கரவணிந்தோன்சேயி தறியாதெனைவிந்தை
எக்காலமுஞ்சுப்பராம னிசைக்குகந்தருள்வேலன்—சிறு

பதம்-இ-ம்-சுருட்டி தாளம்-ஆதி

பல்லவி

ஆக்கப்பொறுத்தநீயா றப்பொறுப்பதற்
கவசரப்படலாமோ

அநுபல்லவி

பாக்கியவகவதிக்கும் பாலா
பன்னிருபுயத்தினிறையர்வடி வேலா
ஜாக்கிரதையாககான் சொன்னபிடத்தினில்வாராமல்
சம்பந்தப்பிவந்தென்னைவாதுசெய்கிறுப்முனபின்பாராமல்—ஆக்

சரணங்கள்

கரும்புதின்னவுங்கூலி வேணுமோ,நல்லானமனம்
கனிந்தாலுண்டோ வேலிபுஞ்சொல்லாய்
அரும்பூங்குழந்தையது வமுகுரற்கேட்குதா
அங்கேயிருந்தாலும்நானதற்குப் பாலைக்கொடுப்பேன்
திரும்பவும்வருகிறேன் பாருமிந்தபேச்சைதான்
திகைத்துதிரைக்குவேதா விடுகிறுப்பெருமூச்சை
அரும்பாவியானாலும் காக்கவைத்திநாருமனா
யடக்கத்திலிருப்பாளோ வந்தசேதியாரியிரோக—ஆக்

உன்னை விடானதிக காமி உனக்கு
முன்னெனக்குப்பகைக்குதே சாமி
இந்நேரயென் செய்தாயென் றுசங்கொடுப்பாளோமாமி
இப்படிச்சொல்லுமெயிந்த பூமி
கன்னலவில்லிசையும்வேதை பகவானுக்கேதெரியும்
காமினுனென்றேயுமது கருத்தெதமிகவறியும்
கன்னிசக்காளத்திபெண்ணை யெங்குந்தூற்றிடுவாளே
கணவனுக்கில்லாதுசொல்லிக் கற்பித்துத்துறத்துவாளே. ஆக்க

ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டென்றுசொல்லி
யவனியோர்சொல்லும்வார்த்தை யதையறிந்தேனேயின்று
சாறறிலேவாணும் தெளிவிலேயிருவென்ற
சங்கதிபோலபேசுகிறாய் வீணாய்
காற்றங்தோணுமோமூடிப் பார்த்தால்காணும்பேருக்கும்
நாயகாவதுதப்பிக் கொள்வதுவதியோசை
போற்றிச்சுப்பராமன்யாடும்புண்ணியசுபபிரமண்ணியனே
பொல்லாளானுலுமாகிறேன் போகும்வேளையாகுதிப்போ—ஆக்க

பதம்-இ—ம். அடாணு—தாளம்

பல்லவி

எனக்கென்றுஎங்கிருந்துவந்தாளோசக்களத்தி
என்செய்வேனடிசகியே

அநுபல்லவி

தனக்கேயில்லாமல்மானஞ் சன்னதங்கொண்டுபேசும்
த் தவடிவேலனையித் ததியிற்கைசோரவிட்ட

சரணங்கள்

ஆதினுளையிலெந்தனை சொல்லியதெல்லாம்
அலட்சியமாயெண்ணிப்பரிந் தேனே
குலகோரனவனென் றறிந்தாலினங்குவேனே
தோகையேபெண்புத்தி பின்புத்தியேன்பதுபோல். என
மால்மாமுமதிபதி விருந்தகும்பத்தனத்தை
வயக்குபுகையில்விழச் செய்தானே
தோல்மேலெயாக்கிய குதுக்கன்ளியவனோ
தொழுதேதேபென்மேற்பகையும் விடுத்தானே-என

அருக்குழந்தையவற்கோன்றுசரச சம்மாலேயென்று
அசந் தினிசினியானே மயில்வேலவன்
கருசிபினம்போலெனது கன்னிபருவமதைத்
தாத்திநறைகண்டபின் தூரநின்றனேமானே. என

எத்திசைபுளோரேத்து மெழில்மயில்வீரனென்றே
இருமாந்தென்சுற்றமதைத் துறந்தேனே
பத்திசெய்சுப்பராமன் பதத்துக்கருட்பெம்மானை
யதைத்தகான்கைக்கொண்ட வப்புசுப்புக்கள்ளிசிமாட்டி—என

பதம்,இ—ம்,பியாக்கடை.ரூபகதாளம்.

பல்லவி

எனக்காகிலுமவளதிகசுந்தரமாக
விருக்கிறுளோசாமி

அநுபல்லவி

உன்னைக்காணநிமைப்போதே யுகமாவிருக்கிறதே
ஒப்பிலாக்கழுக்குனறி லாச்சிபிலு நங்காளே-என

சரணங்கள்

கண்களிரண்டும்வண்டோ கனிவாயிதழ்கற்கண்டோ
சுதனியமோதுடை காமடபீடமோவல்குல்
பெண்கட்கெல்லாமோடியாய் பேகமவன்கிரிடியோ
பேண - யனமோவவனைப் பெருமையாயோதுகிர்ர்-என

தங்கக்கொடமோகொங்கை தன்குமுதமோசெங்கை
சளரம்பாகந்தகமோர்வை சந்தனேமுகசோவை
துங்கவில்லோபுருவம் சொல்மங்கையோபருவம்
சொர்னச்சரயலோதிரேகம் கொகுசோவவள்சம்போகம்:என

கோதிலச்சுரம்பேசி கோடிதரங்கைவீசி
கோடைபிடிதுடிமின்னல் குமரேசரவவளின்னம்
ஆகிலுஞ்சிலகால மானபின்தெரியும்
அயள்செய்யுமோசத்தில் வகிலமெல்லா மறியும்—என

பதம்.இ,ம், சௌராஷ்டிகம்.தாளம்,ஆதி

பல்லவி

அதவுஞ்சொல்லுவாளின்னமனேகஞ்சொல்லுவா
ளவள்மீதிற்றுற்றமென்னடி

அநுபல்லவி

மதிதவழுஞ்சோலைசூழ் வேளூர்முத்துக்குமாரர்
வயங்கும்பதத்தைக்கண்டாற் சுபங்கொள்வரேபுவிமேல

சரணங்கள்

கழுத்திற்கட்டுங்கரிய மணிக்குக்கடையாளுட்கு
கனகரத்னமிழைத்த கண்டசரமுமாச்சே
பழுத்தவெற்றிலைக்கூறிற் பதம்பாடியதும்போச்சே
பாங்கியர்க்கேவல்சொல்லும் பணைப்பைப்போலவட்டாச்சே- அநு
எந்நேரமிங்குவந்து நகையென்றுந்துணியென்று
மிறவற்கேட்டநாள்போயின் கெதிரிட்டுப்பேசலாச்சே
சன்னகரையாடிய மேடையாச்சேவது
சாய்ந்தவனுக்குக்குஜங் தங்கக்கிண்ணம்போலாச்சே
நயந்தெரியாதவற்கு நாகரீகமாச்சே
நாலுபேர்வரப்போக நாட்டங்களுமுண்டாச்சே
ஜெயங்கொண்டவடிவேலன் திருவருள்மிகவாச்சே
தினந்தினஞ்சுப்பராமன் செய்பதம்பாடலாச்சே- அநு

பதம் இம் கானடா தாளம் ஆதி

பல்லவி

அன்பனைத்தேடி அழைத்துவாபோடி

அநுபல்லவி

பொன்போலிலகுமெந்தன் புத்திமிகவாடுதே- அன்

சரணங்கள்

பருவமதினுடினன் பட்சமுடன்கூடி
பொருவிலின்பத்தைத்தந்த புண்ணியனெனும்வேலனும்
கன்முதன்பாவும் கலையுமேபாவம்
மன்மதன்செய்யும்கோலம் மாதரங்சயிக்காலம்
ஒப்பொருவரில்லா னொளிந்ததைச்சொல்லா
சுப்பராமனிசைக்கருண் சுடர்வடிவேலனும்

பதம்-இ-ம்-பியாகடை. தாளம். மிஸ்ரம்.

பல்லவி

அன்னமேயென்னமாயமோதுரை
இனம்வாக்காமேனே

அநுபல்லவி

வன்னமயிலேறும் வேளூர்முத்துக்குமார
மகிபன்தனைநீராடி மாமீனையழைத்துவா - அன்

சரணங்கள்

அந்தசங்கத்திலவர்க் கெளக்குங்குறை
யாராமலேயிருந் தாலும்
சொந்தம்விடாதடி கற்பகாலத்திலே
சூரியன்போர்புரிந் தாலும்
சந்தடியாக வுகந்தமனிதர்கள்
கோந்தரிப்பார்மெக் கென்னடிவேளை
சொந்தநமக்கிங் கிருக்கநினைந்தவே
தோகையேயொன்றுக்கு மஞ்சாமற்போய்வாடி - அன்

சொற்பனத்திலுமெனமற வாதவர்
சோதனைதானசெய்கி றரோ
கற்பனைக்காரச்சக் காளத்திகள்செய்த
தாட்டோட்டத்திற்குள ளாரும்மா
அற்பமனித ரவருமவாகாது
ஆயிரத்திலொருவர் நல்லவர்மானே
கற்பனைசொற்களைக் காதிற்கேட்கொணாதே
கண்ணாளன்வந்தார் பதினாயிரம்போடி - அன்

அன்புள்ளசாமி முகத்தில்விழித்தாலும்
அஞ்சுகமேவிழி போமோ
புன்குறங்காமப் புழுக்கச்சியையேலனை
புல்லுவதுவழ காமே
இன்பந்தருமெங்கள் கந்தசுவாமிதுரை
எங்கேயிருந்தாலு மென்யிஷ்டமுண்டு
கம்பினபேர்களைக் கார்த்துங்குணசீலன்
காரூந்துதிசுப்ப ராமனுக்கனுகூலன் - அன்

பதம் இம் ரூபகம் தாளம் ஆதி

பல்லவி

எட்டயிருந்துபேசும் இது
எனதுறவையுமவீசும் சீமானே

அநுபல்லவி

அட்டதிக்கும்புகழ் கதிர்வடிவேலா
தகிலமதினத்தம்பெற்ற வம்பிகைபாலா - எட்ட

சரணங்கள்

தொட்டாலென்னைத்திரு நீலகண்டமல்லவோ
தொடவேண்டாமினிதய்கள் கடத்தையைச்சொல்லவோ
பட்டியெவளோவுய்மைக் கெடுத்தாளேனோயல்லவோ
பாவியவளைக்கூடி யின்னமுமிப்புல்லவோ. எட்

சட்டமாய்ப்புருகு சாந்தணிந்தாளோ
சரசவார்த்தைகளாடி விரகந்தந்தாளோ
பட்டாபகற்போற் றேவனுமக்களா
பாக்கியாமவளை மருவியகோள- எட்

குட்டிச்சுவரில்முட்ட வெள்ளெழுத்தாகுமோ
கொஞ்சுகிறீரேதோயென் குறையதுயேகுமோ
இஷ்டமவள்மீதிருக்க மனமதுகோகுமோ
இரவியுள்ளவரைக்கும் பேசவும்போகுமோ' எட்

பதம்-இ-ம். காம்போதி தாளம் ஆதி

பல்லவி

இன்னசொல்லினால்மிகுந்தவெழிற்சகியேநீபோடி
எந்தன்துரையைத்தேடிவா போடி

அநுபல்லவி

அஞ்சலிசெய்யுந்தொண்டர் நெஞ்சினிற்குடிகொண்டு
அருமலர்க்கமழ்திவ்ய திருமலையின்மேவிய
ஐயன்பன்னிருகையன் மெய்யற்கு
மெய்பரதிகழ்நிலைவள்ளினி லென்னைப்போலும்
கள்ளிநூம்பூமணையபோலும் வள்ளிதெய்வானையுடன்
உள்ளமகிழ்மருவும் மங்கைலோலன்
கங்கைபாலன் பொங்குசீலன்
செங்கைவேலனைப் பிரியாமலனுதினம்
அருமைஅறிந்ததுரை பிரிந்தறிந்திடவே-இன்

சரணங்கள்

அன்றுநான் திரண்டு இன்றுவரையப்படி
இருக்கநில்லையென்சாமி யென்னைப்பிரிந்து
நின்றிடவேமாதர்குழு வொன்றிரண்டாயோ தினரோ
கலைபெற்றிருந்தபிம்ப நிலையும்விலைபெற்றரோ
நெஞ்சினிற்சஞ்சல மிஞ்சுதஎன்செய்வேன்

இந்நடனமே தனை அந்தமாய்ச்செய்தவர்
எப்படியோவிது வொப்பினளோ
ஆலவாலதிலே விண்போகாதடி
பெண்ணரசேயினி தன்னியரேமிகு
தன்னிடனமொழி யுரைத்ததருணமேன்று
அழைத்திவர்தருகினில் விடுத்திடும்விரைகமழ்
அழைத்துபுரிதிரு வாண்டவித்தகள்
வானிலதுபுகழுவன் யானறிந்தகதை
நீவுடனெனில்கலை நீக்கியெந்தனை
நிருத்திமடிமிசை யணைத்துபிருதனம்
பிடித்துயிதழதை கடித்துரசமது
முடிக்கவல்குலை விரித்து
வெற்றிமுகத்தை புயத்தையணைத்தொரு
முகதமளித்து அத்துடன்வந்து
இடங்கள்மிதந்து கலந்து ஆலிங்கனஞ்செய்து
மிகுந்தானந்தமடைந்து அணைத்து
விடாதரையென்னை விடாதேவிடாதேயென்
குலோயுமிட்டு எந்தனையும்விட்டு
பின்புகர்த்துகர்ந்து பிரண்டுபிரண்டு
பலமுலாதவணடு வண்டுமெனமதுமகிழ்ந்து
என்றாகலவிளையக்கடந்து கமழ்பெரும்
காருநலவுஞ்சென்னையெழி லாறுமுகன்சொன்னதமிழ்க்
காம்பீதிப்பதந்தனைப்பாடி நானபாடகசாஸ்திரகோடி
சரணஞ்சொல்லி நொடிக்குள்ளேயோடி
மருந்துமினவேயென்று அழைத்துவாபோடி— இ

பதம் இ-ம் பியாகடை அடதாளம்

பல்லவி

எனக்குகற்றதெல்லாமோதுகிறீரிங்கே
இனியொன்றும் நடவாது சாமி

அநுபல்லவி

தாதலர்சோலைகள்சூழ் வேதபுரிவாசரே
சுகமதனைத்துதிக்குந் தையலர்கணேசரே—எது

சரணங்கள்

சின்னஞ்சிறுபிள்ளைகள் செய்மணச்சோறுபோலே
சித்தெல்லாங்காட்டுகிறீ ரடுக்குமோஒருக்காலே

கன்னியரிருவர்க ளிருக்கப்புவியின்மேலே
கலங்காமற்றிரிகுறீர் காமன்சரத்தினாலே-ஏது
உம்மைபோற்றிரிபவ ருலகிலொருவருண்டோ
ஒண்டொடியவளிடத் தென்னவுசிதங்கண்டோ
கொம்மைசேர்தனத்தினுள் கொடுக்கவிதழ்கற்கண்டோ
கோதையவளிருக்க காணுமக்கென்னதொண்டோ-ஏது
பரவசமேனைக்கன்று பாலித்ததைமறந்தீர்
பசப்புக்கள்ளிசெய்சூதாற் பட்சமெல்லாந்துறந்தீர்
பரைதருபாலகனென்றே யாரனைத்துஞ்சிறந்திர
பத்தன்சுப்பராமனுக்குப் பதங்கறவேமிறந்தீர்-ஏது

பதம் இம் பைரவி அடதாளம்

பல்லவி

சற்றேசொல்லடி என்சுவாமிக்குமானேநீ
சற்றேசொல்லிவாடி

அநுபல்லவி

உத்தமாபுகழுந்திருச் செந்தூரிநித்யமும்வளர்
முத்தையனிடத்திலெந்தன் மோசமதைநீபோய்பெண்ணே சற்

சரணங்கள்

உற்றபலனத்தையும் வெறுத்துத்தனித்துமலர்
வெத்தெதிர்பாடுகிலென்கண் ணித்திரைவருவதில்லை- சற்
வண்டுநோகினற்றுங்கரும்பைச் சோண்டுவில்வளைத்துமதன்
சண்டைசெய்யுறுனதைக் கண்டுமனக்தேங்குதையோ. சற்
சுந்தரசுப்பராமன்சொல் செந்திலம்பதிவேலன்
வந்தெனையணைவதற் கெந்தவிதமாகிலும்போய். சற்

பதம் இம் அடாணு அடதாளம்

பல்லவி

கதவைத்திறந்துபேசடி அடியென்மானே
கதவைத்திறந்துபேசடி

அநுபல்லவி

மதனைப்பானஞ்செய்தோற்கு மயக்கங்கொண்டதுபோல
மனதுதடுமாறி யுனதுவீடுதேடி
வந்தானுனக்குநான் சொந்தமல்லடி

சரணங்கள்

மானகலாப மயிலின்அன்னத் திரள்பேடை
வபங்குயில்களுங் சுருங்குரலில்
காமினனகார் திருப்பதி கலவிமோவுணதுசித்தம்
நடுக்கமனமுடன்மனக் திடுக்கிடவேனுங்காய்
தடுக்காமிதயுன் அுடன் படுக்கவந்தேனையோ — கத

நிலவுமனல்போற் ருவுமேதகறுங் குயிலும்
நிருதகதிருத்திக் கூவுதே
இலவுகாத்தகிளிபோ லேங்கிமனம்வாடி
எதிர்த்துமனைப்பைபயல் பறைத்தே யயிருக்கிற
விதவுதையறிந்துமென் றுறைத்தனத்தன்கனிலவை — கத

புகழுமகுடஞ் சூட்டுவேன் உனதுதிரேகம்
பூசிக்கப்பணிகள் பூட்டுவன்
மகிழ்பமுயுனக்கு மதனவிலைகாட்டுவேன்
மாமனையதனது போமைதருவைக்கெடு
வாயையமிகுத்தெரிந்தன் காலதப்படைக்குதும். கத

பதம்-இ-ம்-காம்போதி. தாளம் ரூபகம

பல்லவி

இந்தக்கிழவனுக்கு.பித்தனைமெசாகுசாலுறல்
பெவர்க்குசம்மதியோ.

அநுபல்லவி.

விந்தைமகிழ்கழுக்குன்றின் தெய்வப்பெண்ணிகல்லாட்கு
விந்தைக்கணவனைங்கள் வேதகிரியீசராப. இந்

சரணங்கள்

ஆருக்குத்தணையாவா ரம்பலங்கூத்தனுர்
பார்க்கப்பதந்தறமை பாம்புமெனுப்புங்கோனுர்
தீர்க்கமாய்கழுக்குன்றிற் றிருக்குளிணையின்மீது
மார்க்கன்யோக்யமென்றேசிலாக்கியமாய்சொல்லவந்தாய்
ஆட்டைக்களவுசெய்து வம்பலத்தினின்றவும்
ஓட்டிவிறந்தாண்ணதும் வுலகமறியாதோ
நாட்டமாய்க்கழுக்குன்றில் ரிஷபவாகனமீது
நாட்டியாய்த்திரிகிற சங்கரிலோலனும் இக்

கட்டுண்டுபமலுற்றபின் காலாலுதைக்கவும்
வெட்டுண்டுதலைமீது விறகுசுமந்ததுவும்

பிட்வோணிச்சிக்காகப் பிறம்படிபட்டதவும்
பட்டபாட்டையின்னஞ்சொல்ல வெட்கமிகதோணுதே இங்

பதம். இ-ம் சாவேரி ஆதிதாளம்.

பல்லவி

இனிமேலவ ரென்னதந்தாலும்நா
னிணங்கமாட்டேண்டி யக்கா

அநுபல்லவி

கன்மாறவுஞ்சிகண்டிமலே முருகையன்வாழுந்த
செய்யான கோயின்முன்
மூன்போல்மேல்விழ முக்கிக்கோணாடே னொரு
முட்டமுட்டமதில் முட்டவிட்டுப்போச்சு இனி

சரணங்கள்

கோவிலிருக்கிப்பிம த்தால்முன்சமங்கொதித்தவடியுமடி விசை
கூடமேற்கொண்டால முன்னேரந்சிற்கோழிகூவிவிடியுமடி
கேவிக்கிடமாகதே ஒருசதுசகிடக்கமுடியாதடி அவர்
கிண்டினகிண்டத்தில் பண்டத்தின்மூக்குக்கிழிக்குமடியுதடி

கோலேமோமோ மாத்திறநூளத்தகளேயோ
வளேயோதுறமேவு ரலாகனே
சாவோதலேயமுத்தின் வலியானேத்து
தத்துக்குச்தப்பி பிழைத்துவந்தேனடி. இனி

மங்கையர்சொன்னையென்றுலவற்கு மகாலிங்கசபானடி-இனி
மாமிசமூறவருந்தகனத்தே அமிர்தபானமடி
பொங்சரவல்குலூசகுள்ளேவிரலிடல்பொங்கனுஷ்டானமடி அது
போதக்கரமைமூடிதன்னேரமுமவர் புத்தியிலகையானமடி

சங்கதிபோலினி யெங்குங்கிடையாது
கடனடயுள்ளமட்டும் போதுமவமானமை
பலகசதைபென்சோல்வே னென்றுடடிசொத்திரி
பட்டபாம்பூது பட்டாலடைக்குணடபடி இனி

மட்டவிழ்வாசமலர்க் குழலாள்தெய்வயானைக்கனுகூலாலே
வர்ணமையிலேறிசன்னயமாகப பவனிவருஞ்சீலர்
பட்டர்பத்தர்வரந்தருமம்பிகை பிந்தைமகிழ்பாலர்சாலஞ்
செந்திருமேவியகுனறக்குடியிற் செழிக்குமவடிமேவலோ

கொண்டேத்தழுவி யணைந்தசுகமிந்த
தோல்லுலகினமிகும் மிருப்பாரோடியந்த
கட்டழகன்செய்த கோலத்தைதயென்சொல்வேன்
காசினிமேற்சுப்ப ராமனுக்கருள்வோன்-இனி

பதம். இ.ம். கேதாரகௌளம் தாளம், ரூபகம்

பல்லவி

சலந்தாலல்லவோ கலக்கமுண்டாகுங்
கட்டுரையேனடிசகியே

அநுபல்லவி

உலகம்பணியும் வேளூர் குமரேச
னரிவையபாயேன் னிடத்தில்வந்தவனைக்- கல

சரணங்கள்

சுத்தமுள்ளபிராண சகியென்றிருந்தேனே
துரோகியென்றிலைதயரி யாமற்போச்சுதடி
எத்தனைநாளாக யோசித்திருந்தாயோ
எப் டிதுணி வேனோ
சித்தங்குளிரந்தகே மானே
சிந்தனைக்குள் ளானேன்
பக்தியில்லாதவ னென்றுமென்மனதில்
பட்டிறந்தால்முகம் பார்த்திடுவேனடி- கல
அடுக்குதோளைகெடுக்குங் குற்புத்தியுனக்கு
ஆர்சொல்லிக்கொடுத்தாரடியுன் னினத்தில்
அமமடி தனில் கைவைத்துப்பாரடி
ஆவிபரக்கு தடி
படுக்கைவிட்டினிற் றிசியுமெனக்கந்த
பல்லிசொன்னபோதே தெரியும்
நடுக்கிடடும்வாடியப்போதே யென்னம
தெருவினில்வந்து யிருவரைக்கொண்டேன்- கல
உள்ளரியுங்கள்ளன்போ விருந்துகொண்டு
உண்மைபோலெனக்கு நடந்து
ஓதஞ்சுப்ப ரமணைக்காத்திடும்
முதுமையருள்முரு கையன்
துள்ளாதடி மோசக்காரியெனது
துறைப்பறிவானடி யுனதுசேதி
மெள்ளலாக்கென்மே லுற்றவெய்யமோக
வெற்றியினுலுன்னைநா னென்றுதொட்டனர்- கல

பத-ப் இ:ம்.தோடி•தாளம்: ஆதி

டல்லவி

மானேயுன்மீதினில்வர வாமேதமனோாகங்கொண்டு
வந்ததுமாகோகுலட்சக் தரமல்ல வாமசால்

அநுபல்லவி

நானேசொல்லுகிறேனினி தேனேயினபமாய்ச்சேரு
நரபதிதனபதி யமகுணசீலனடி
தேனொழுகும் தனன்ஸ்ரீ முத்து சம்சைலமகாரா
சேதுபதியுமபூபனட சதிபதயாலதுரை - மா

சரணங்கள்

கோடியுகங்கள் தபசு செய்திணமைவருமைய
குணம்சீலபுருஷர்க் குலகிலனமருமோ
மோடிசெய்யலாமா வனதுமனமகிழ்ந்து
தோடிராகமபாடிச் சுகம்தன்கண் மேல
மோடியவர்க்கு வமய்க்குமாதீ
முனபுசெய்தபுண்ணியவச மிந்தமன்னன்கிடையாதம.
தேடிவருமின்னிணையர் கோடிதன்னிலொருத்தி
சிந்தையில பூரணமெசெய்தா லத்தஷ்டமார்க்கடியே. மா
உன்மனதின்படியே யனுபவிக்கத் தருணம்
வொருவநுக்குக்கிடையாத திலாதனமாம்
செம்மைசேர்விலாசமதை செகத்தனில்விரிக்கபிற
காமரிவர்போற் புருடனதானேடி
மன்மதச்சரச னிவனேயிசைந்தபடி
வங்கணம்பயங்க ரங்கநா தனுற்
றென் ... த்திரிகரிமன்னினமன்னம மோகசாலியென்று
செப்பியிருந்திடுஞ்சேதி : யேப்படிபலித்ததடி- மா
தேசமெங்குமேபுகழு முகவைப்பதிவளருந்
திருவளரும்ப்ரசன்ன மோகாம்புஜன்
நேசமாயந்த மற்றவமனமுமகளும்
அரசரும்குற்ற மற்றயானமதிகளும்
இராசரினைவர்வணங்குஞ் ஸ்ரீமுத்துக்கல்லேந்திரன்
ஞானசேதுபதி யானபாலலோசனும்
காசமாமல்லிகார்ச்சுன பூசுரன்தமிழ்க்குதவம்
மங்களகலியாணகுண திங்கமகளங்கதுங்க, மா

பதம்-௩-ம். அடாணு தாளம் ரூபகம்

பல்லவி

மானேபெண்கள்மீதிலவர்க்கென்னமோடி அந்த
னம்பிபெண்ணசொன்னளோ நம்பியிருந்தேனே

அநுபல்லவி

தேனுந்துசோலைத் திகழுந்திருத்தனிச்
செங்கல்வராயனுக் கிங்கிதமாட்ட — மா

சரணங்கள்

வந்தவிலேகிபத்தும் பணையிட்டானைப்
பார்த்ததுக்கொண் டாரோ அந்தப்
பாதகிபஞ்சாங் நீ தாலேயவரென்ன
புலம்பினக்கண் டாரோ
சொந்தக்காரிபோலே தள்ளுவதால்மனந்
சொக்கியவன் பரவன் னரையுமிருப்பாரோ
தோதகதந்தால்பல காரியமாகுமோ
செம்பிற்கறந்தபாலு மூலைக்கேருமோ—மா
சந்ததமுமலைத் தாலேமனம்வெகு
சலிந்ததனிற் பாரேதுபச்
சருஞ்சிறுமைகண் டவருடன்வரும்
பெருமைகா ணரே
அக்நிசக்திபெந்த வேளையாகிலும்
வாவலாவென்னை யழையா திருப்பாரோ
ஆனைபேறியிட்ட வாசம்தழைவாரோ
வாக்கப்பொருத்தனை ராதப்பொருத்தாரோ.சம்
கொம்பனையாள்செஞ் சர்ப்போதனையால்வருங்
கோபததுக்கஞ்சுவா ராரோ நாளுங்
கொல்லைத்தெருவினில் விற்கும்பூசினியை
கோடித்துக்கொள்ளுவா ருரோ,
உம்பர்மகிழும் விசித்ரகவிசொல்
சிதம்பரக்கீதி நெருங்கினராரோ
யன்றுடன்கூடி வாழ்ந்துபகைப்பாரோ
யனிக்கன்றேயே பாகாசமுமபாரப்பாரோ:௩

பதம் இம் காம்போதி தாளம்

பல்லவி

ஏனின்ன மயக்குறீர்சாமி
எத்தியெத்தியென்னைமிக்கசுற்றநெல்லாங்கொட்டிகொட்டி

அநுபல்லவி

போனநாள்முதலாய்நீரும் நாமிருந்தஒருமை
போலவாயிருந்தாரிருப் போநாவேலவரே
ஞானக்கிருபாகரரே தோகைமயில்வாகனரே
கன்றுசன்றவுந்தனைச மின்றுவரிங்கேன்விஸ்வாசம்

சரணங்கள்

அண்டைபிற்றிரண்டபெண்ணைக் கண்டிதுவரைக்குமவ
ளாசையால்வராதிருந்தீ ராகிலுமந்த
ஆசையறுபதநாள் மோகமுப்பதநாளென்
றுறுஞ்சொல்விப்பாரி லின்னங்கேள்வியில்லையோ
கொண்டமயிலோனையென்பார்கண்டசுகம்போனினைத்துக்
கொண்டிரோவங்கே யிப்படிகூடலாமோ
அண்டினயிடஞ்சந்தேகமான தாலிக்கனம்வந்தீ
காட்டிப்படைத்தோவாலிபசேட்டை செய்கிறீர்போம்
முன்னேஐந்தபின்னேஐந்து பந்தலிற்பகினைகுமாய்
முன்பணங்கொடுத்து முன்னேமோசம்பண்ணினிரோ
மூடவன்கொம்புதேனுக் காசையுற்றுப்போலவெங்மேல்
மோகமாகுறீரக்காரியஞ் சரியா மோ
என்னசொந்தக்காரி யாளுலும்பலவந்தமோசெய்
திருக்குதோந்திரை பெண்ணியுள்ளத்தி
லின்னதெனவறியாமல் சன்னயமாய்ப்பேசியுமே
லெதுக்கிரொன்னக்கண்டோ பாத்தியப்படுவதுண்டோ
தாசிகளுக்குறவுபணங் காசமேயிருப்பதென்றுஞ்
சக்திதேர்ந்துசும்மா யிருக்கவந்தீர்
ஜாலசக்தஸ்தாபித மிருக்கயிரகெங்களுக்கென்ன
சாட்சிவேணபாக்கியங்கள் தானேயீயுமே
சூசனைதெரியாமல்வாய் பூசியேயென்னேறவு
சொந்தங்கொண்டாடுரீரதை தூரவையும்
வசியேயொன்றுமில்லை யென்றுங்கையைவிரிக்குறீர்
இந்தக்கூமுக்குராயிருபத்தெட்டு நாமம்போதும்போதும்

சந்தனக்குழம்பைவாரி மேக்குழலிலேமேலிரைந்து
தாளாமென்றுக்கையந் தொட்டுதாளிழுக்கிறீர்
தரிக்குமன்னைக்கயருய்த் திரித்துவானத்தைவில்லு
தாகவனைத்தேமயங்கி யேகப்பார்க்கிறீர்
எந்தவிதமுஞ்சாளம் போட்டாலுமுடியாதிப்போ
யேந்தனுடன்சொன்ன தெல்லாங்கையின்மேல்லவையும்
எந்தப்படிசெய்தாலு மென்னத்தின்படிநடக்கும்
யென்றைக்குகுழந்தைவேலன் வந்திருக்கும்வடிவேலரே எனி

பதம் இ-ம் பியாகடை தாளம் ஆதி

பல்லவி

இந்தமட்டேக்கும்வாரிக்கட்டிக்கொண்டதுபோது
மேத்தலாங்கப்பனுக்குத்தானே

அநுபல்லவி.

வந்தவழியைப்பாருஞ் செந்தணிகைவேலவரே
வரிசைபல்லக்கெனக் களித்தீர் முன்னாலே
மாணிமேநட்டாத்தில் விட்டீர் பின்னாலே
காரிபிள்ளைக்குழிதனைச் சுற்றுவதுபோல
நடுகிறீர்பெண்டு ருசிகண்டேம்மாலே-இந்த

சரணங்கள்

சோன்மயமாச்சுது நீர்வந்தெந்தன்வீடு
சொல்லவேணுமோவதை வெட்ககேடு
என்றுமெனக்கிந்த குடியாரெனக்கீடு
யெல்லாபவிடுத்துன் னப்பனெடுத்தானேபோடு
ஒன்றுமறியீர்கபட நிஜஞ்சென்பச்சுரு
வுரைக்கும்வெறுங்கைமுழம் போடவந்திர்மாது
என்னகுட்டிக்கரணம் போட்டாலுமநடாது
யிலைபொத்தலென்கிறீர் பந்தலில்நிற்கும்போது-இந்த

நவரெத்தினச்சுவரெங்கு மிழைத்துவந்திர் முன்னம்
நடுவீதிமாத்திரக் தொண்டியாயிருக்கு தின்னம்
அவர்மிருகநாற்பச்சைக் கண்ணாடிபோற்கின்னம்

அணிநிழலாடுது வாகனாமுன்னும்பின்னும்
தவிக்குறீர்ச்சபிலைழ மேல்மையல்கொண்டு
தங்காதவலைப்பினிற் கொருத்திடுகண்டு
செவிதனிலோதியின்ன மாள்கிரீடபெண்டு
செறக்கிரீர்வேலரே நடைநட்டிக்கொண்டு
இலங்குந்தங்கப்பணிகள் பூட்டிக்கொண்டேனே
என்குடியைக்கெடுக்கவங் திருக்கிரீரின்னந்தானே
மலைத்துக்கோடும்மை பன்னவார்த்தையைத்தடுத்தேனே
வாய்கொழுப்புசிலைவாய் வந்ததெனக்குசதானே
நிலையைத்தடவவந்நீர் குளிர்ந்தறுதிரேகம்
தனிக்கொண்டைபோட்டு விசாளிநீரனேகம்
பலுக்குரீர்பலக்மின்ற காக்கையின்வேகம்
பார்த்தால்தெரிந்தமு மூமதுவிர்வாகம் இந்த

பதம்-இ-ம்-சௌராஷ்டிரம.தாளம்.ஆதி

பல்லவி

என்னடிமெத்ததளுக்குகார்ட்டுரூப் காணுமேவன்போடி.
என்னடிதளுக்குகாட்டுரூம்

அநுபல்லவி

வர்ணக்கிளிகள் உளருமொழிகள்மிலை
மானாரிதுவை மாதவராதியோர்
பண்ணிப்பணியு முகுந்தவன்றனிரன்
பாலிலகப்பட்டு பேச்சங்கைவிசுவாம்

சரணங்கள்

இக்காலமிப்படி பேயிருக்குமென்று
பெண்ணேதேயென்வார்த்தை கேளடிநீயின்று
எக்காலமுஞ்சுப்ப ராமன்கவிகோண்டு
யென்னைமறந்தவர் தன்மேல்மையல்கொண்டு. என

பதம் இம் பந்துவராளி தாளம் ஆதி

பல்லவி

அதற்குள்ளேவேனிந்தபதட்டம் மலைந்தனைநமருவி
அனுபவிக்கலாம் பொறும்பொறுஅதற்

அநுபல்லவி

மதுமலர்தடம்சூழும் தணிகைமலைவாசனே
மயில்வாகன குமரேசனே. அத

சரணங்கள்

இடுவார்சொந்தமாயிருந்தால் முதற்பந்திக்கடை பந்தி
என்பதுண்டோ ஒருவரைத்
தொடுவேனென்பதைத் தள்ளும்
உமக்குப்பரவசமாய்ச் சொன்னசொல்லுக்கு
கையைவிடுவிடு அவதூறுக்கிடமாவந்தும்சேரும
வேளையிதுவோசாமி எண்ணிப்பாரும்

கேடிநேரமில்லை நிலாவெளிச்சம்வாங்கட்டும்— அத
திருடனுந்தலையாரியுஞ் சேர்ந்தாஉலகத்தில்
தினங்கொள்ளை அடிக்கலாமதுபோல்
நாமிருவரும் இரகசியமாய்நடத்தும்
காயத்தை பிவாகள்கண்டுபிடிக்கலாம்
அதுதெரிந்துயெனக்குக் கண்ஜாடைசெய்கிறீர்சாமி
வேலவர்க்குமுன்னமே எனுமதிகசாமி
உரிமையென்தங்கைமார் படுக்கைக்குபோகட்டும

உனதுமனதின்படி பின்னறக்கேயாகட்டும்- அத
ஏக்கங்கொணடிருக்கிறீர் எனக்கில்லையோசாமி
இதற்கெண்ணமிடலாமோ ஆகினுமென்ன
ஆக்கப்பொருத்தஉமக் காசப்பொறுக்கொணாதோ
அவசரப் படலாமோ
நீக்கமற்நெருங்கும் கோங்கைவள்ளிமேலாலரே
தூக்கவருமோமதன் போர்செய்யாகிடக்கண்டும்
சும்மாயிருஞ்சற்றே சந்தடியடங்கட்டும்- அத

பதம் இம் பைரவி அடதாளம்

பல்லவி

எத்தைகண்டுநீ இச்சைகொண்டாய்மகளே
என்கண்ணேபெண்ணே நீஇப்போ- எத்

அநுபல்லவி

சுத்தப்பயித்தியகாரன் கங்காதரன்தோகையேமுன்னவன்
பேயுடனாடியதொந்திக்கே பழையக்கந்தைக்கோ
ஏறும்நந்திக்கோ செய்யும்விந்தைக்கோ. எத்

சரணங்கள்

புலியையுரித்துடையணிந்த போர்வையானைக்கே
வலியகரத்தில்மழுவையேந்தும் மனதுதுணிவுக்கோ
மலையின்பாம்பைபிடித்துக்கழுத்தில் மாட்டிக்கொண்டதை
பூட்டிக்கொண்டிட்டமாலைக்கோ தரும்சேலைக்கோ
செய்யும்வேலைக்கோ காமலீலைக்கோ நீ:எத்

மாமனும்மாமியும்வொன்றுய்ச்செய்கின் றவரிசைபெருமைக்கோ
சோமனைச்சிரசிலணிந்த வொருக்கண்துலங்கும்நெற்றிக்கோ
காமனைவென்றவாலயத்தையுண்டு மார்க்கண்டனுக்காகவே
சண்டனையுதைத்தகாலுக்கோ சாம்பல்மேனுக்கோ
கனைவாலுக்கோ கரிததோலுக்கோநீ, எத்

மானைபிடித்துக்கரத்திலணிந்த வனத்தின்வேட்டைக்கோ
மீனைப்பிடித்துதரிக்கவொருகண் விகரும்வேட்டைக்கோ
கானகத்தில்வேடனெச்சிலை கண்டுமுண்டவன்
கண்ணைப்பிடுங்கியகண்ணுக்கோ மாடுவொண்ணுக்கோ
சொந்தமண்ணுக்கோ ஜடைபெண்ணுக்கோநீ எத்

வாழி-விருத்தம்

சீர்வளர்வேளூர்மேவுஞ் சேவலங்கொடியோன்வாழி
பார்திகழ்மறைகளாதி பனுவல்கள்வாழிவாழி
ஏர்பெறுமிதனையச்சி லியற்றியஅன்பர்வாழி
நீர்மலிவேணியன்பர் நிலமெலாம்வாழிவாழி.

சுப்பராமையர்பதம்
முற்றிற்று.